1973 மார்ச் 6]

முடியாது. பொற்கொல்லர்கள் தொகை கட்டியிருந்தால்கூட, அதை அவர்களுக்குத் திருப்பிக் கொடுப்பதற்கு மாநில அரசு மத்திய அரசுக்குத் தெரிவித்து ஏற்பாடு செய்யுமா? மத்திய அரசுக்கு பொற்கொல்லர்கள் கொடுக்க வேண்டியதில்லை என்று முடிவு எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இது நியாயமான உரிமைக்குரல். ஆனால், நிலைமைக்கேற்ப சில விஷயங்களை நாம் அணுக வேண்டியிருக்கிறது. கிட்டத்தட்ட 251 இலட்ச ரூபாய் பொற்கொல்லர்களுக்கு 1963-ஆம் ஆண்டிலிருந்து கடனுதவி வழங்கப் பட்டது. அதில் பொற்கொல்லர்கள் திருப்பித் தந்திருக்கும் தொகை ரூ. 2,69,757 அது தவிர வட்டி ரூ. 38,976 ஆக, ரூ 3,08,753 தான் பொற்கொல்லர்கள் திருப்பிக் கொடுத்திருக் கிறார்கள். ஆனால், அவர்கள் வாங்கியிருக்கும் கடன் ரூ. 251 இலட்சம். மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல் இது மத்திய அரசால் பிறப்பிக்கப்பட்ட சட்டம். ஆகவே, பொற் கொல்லர்களுக்கு அவர்கள்தான் அந்தக் கடனைக் கொடுத்தார்கள். அது வராவிட்டால் அவர்கள்தான் பொறுப்பு ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆனால், கடைசியாக மாநில அரசும் மத்திய அரசும் அதை ஆளுக்குப் பாதி பாதியாக வைத்துக்கொள்ளலாம் என்று கேட்டதற்குப் பிறகு, வசூலிக்காமல் மிச்சம் இருக்கிற அந்தத் தொகையை மாநில அரசும் மத்திய அரசும் பாதிப் பாதியாகப் பொறுப்பேற்றுக்கொள்வது என்ற முடிவுக்கு வந்தோம். நண்பர் ராஜா அவர்கள் கேட்ட கேள்வி, மத்திய அரசு போட்ட சட்டத் திற்கு நாம் ஏன் அந்தக் கடனை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது. அதுதான் இன்றைய நிலை

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவர் அவர்களே, ஏற் கெனவே கடன்பெற்ற பொற்கொல்லர்கள் பெற்றுக் கொண்ட கடன் தொகையில் ஒரு அளவுக்குத்தான் திருப்பிக் கொடுக்க முடிந்திருக்கிறது என்று நினைக்கிறேன். ஆகையால் அவர்கள் அக் கடனைக் கொடுக்க முடியாத நிலையில்தான் இருக்கிறார்கள். அவர்களிடத்தில் வசூல் செய்யலாம் என்று நினைக்கின்ற எண்ணம் கூட மத்திய அரசுக்கு இருப்பது தவறானதாகும். இதிலே மத்திய அரசு மாநில அரசை 50 சதவிகிதம் பொற் கொல்லர் கடனை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பது சரியல்ல

என்பது என் கருத்து. இதுபோன்று எத்தனையோ கடன்கள் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் கடன் கொடுத்து, கொடுத்த கடனைத் திருப்பி வசூலிக்க இயலாத நிலையில் கடன்தொகையை 'ரைட் ஆஃப்' செய்திருக்கிறார்கள். பொற்கொல்லர் கடன் தொகை முழுவதையும் கம்ப்ளீட் ஆக ரைட் ஆஃப் செய்ய இந்த அரசு மத்திய அரசுக்கு எடுத்துக் கூறுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பங்கெடுத்துக்கொள்வது என்பது, திருப்பித் தருகிற கடனைப் பங்கெடுத்துக்கொள்வது என்பதல்ல. கடனைத் திருப்பிக் கொடுக்காமலிருக்கிற நஷ்டத்தை இரண்டு அரசுகளும் பங்கெடுத்துக் கொள்வது. நான் ஏற்கெனவே குறிப்பிட்டபடி பொற்கொல்லர்கள் திருப்பிக் கொடுத்த தொகை கிட்டத்தட்ட ரூ. 3 இலட்சம். அவர்கள் பெற்றுக் கொண்ட கடன் ரூ. 251 இலட்சம். ஆக, சுமார் 2 கோடி 48 லட்ச ரூபாய் திருப்பி வராத கடன்தொகை. இதிலே பாதியை மத்திய அரசும், பாதியை மாநில அரசும் பொறுப் பேற்றுக்கொள்வது என்கிற முடிவுக்காவது மத்திய அரசு ஒத்துக் கொண்டதே என்று மகிழ்ச்சி அடையலாம். இது 1963—64-ம் ஆண்டுப் பிரச்சினை. அம்மையார் அவர்கள் அமைச்சராக இருந்த நேரத்திலிருந்து இருக்கிற பிரச்சினை. நாங்கள் வந்த பிறகு இப்படியொரு ஏற்பாட்டைச் செய்து கொண்டிருக்கிறோம்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மத்திய அரசு ஒரு சட்டத்தைக் கொண்டு வருகிறபோது தேசத்தின் ஒட்டுமொத்தமான நலனைக் கருத்தில் கொண்டுதான் கொண்டுவரும். சில சமயம் தவறாக இருக்கலாம். சில சமயம் நல்லதாக இருக்கலாம். நல்லதாக வருகின்றபோது நாம் ஏற்றுக்கொண்டு, ஏதாவது சிரமம் வந்தால் மத்திய அரசுதான் செய்தது என்று சொல்வதும் அதில் பங்கு எடுத்துக் கொள்வதாகச் சொல்வதும் உசிதம் என்று அரசு கருது கிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நான் நண்பர் மாரி முத்து அவர்கள் சொன்னதுபோல், திரு. ராஜா அவர்களுடைய கேள்விக்கு நிலைமையை விளக்கியிருக்கிறேன். ஆனால் அது நியாயமானதா என்பது வேறு விஷயம்.

1973 மார்ச் 6]

திரு. கா. வேழவேந்தன் : துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு செய்த தவறுக்கு நாம் அபராதம் செலுத்துகிறோம் என்று முதல்வர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படி அபராதம் செலுத்துகின்ற முறையை மாற்ற வேண்டுமென்று இங்கிருக்கின்ற அகில இந்திய கட்சிகள் ஏதாவது தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கட்சி விஷயங்கள் பற்றி எனக்குத் தெரியாது.

திரு செ. கந்தப்பன் : தலைவர் அவர்களே, மத்திய அரசு சில சட்டங்களையும் திட்டங்களையும் மாநில அரசுகளைக் கலந்துகொள்ளாமல் கொண்டுவருவதால் இதுபோன்ற சூழ்நிலைகள் ஏற்படுவதால் மத்திய அரசு மாநிலங்களைக் கலந்துகொண்டு செய்தால் அன்றியில் மாநில அரசு பொறுப்பு ஏற்றுக்கொள்ளாது என்பதை நம்முடைய முதல்வர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இது திரு. மாரிமுத்து அவர்கள் கேட்ட கேள்விக்கு நல்ல பதில் ஆகும்.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே, இந்தக் கடன்களை ரைட் ஆப் செய்யாவிட்டாலும்கூட அவற்றை நீண்டகாலக் கடன்களாக மாற்றி, உத்திரவிட அரசாங்கம் முயற்சி செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்படி முடிவு ஏற்பட்டதற்குப் பிறகு யாரும் கடனைத் திருப்பிச் செலுத்தமாட்டார்கள் என்று நினைக்கிறேன். திருப்பித் தராத கடனை இரண்டு அரசுகளும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று முடிவு எடுத்ததற்குப் பிறகு யாரும் திருப்பிச் செலுத்தமாட்டார்கள்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, மத்திய அரசு மட்டுமின்றி அண்டை மாநில அரசு செய்கிற சட்டங்கள், முடிவுகளினால்கூட சங்கடங்கள் ஏற்படுகின்றனவே, உதாரணமாக அண்மையிலே ஆப்காரி விஷயத்திலே தென் மண்டல மாநிலங்களுக்கிடையே சங்கடங்கள் ஏற்பட்டுள்ளதாக செய்தி வந்துள்ளதே. அதைப்பற்றி இந்த அரசினுடைய கருத்து என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மத்திய அரசு மாநிலங்களை அனுசரித்துச் செல்ல வேண்டும். மாநிலத்திற்கு மாநிலம் வேறுபாடு இருக்கலாம். மத்திய அரசு தான் எல்லா மாநிலங்களையும் அனுசரித்துச் செல்ல வேண்டும்.

திரு. சோ. அழகர்சாமி : தங்கக் கட்டுப்பாட்டு ஆணையின்கீழ் வழங்கப்பட்ட கடன்களை அவர்களால் செலுத்த முடியவில்லை, அவற்றைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்ற கோரிக்கை நியாயமானதுதான். அதை மத்திய அரசு தள்ளுபடி செய்யக் கடமைப்பட்டிருக்கிறது. அதைப்போன்று புயல், வெள்ளம், வறட்சியால் பாதிக்கப்பட்டவர்கள் இருக்கிறார்கள், அந்த விவசாயிகள் பட்டிருக்கின்ற கடன்களையும் அரசாங்கம் தள்ளுபடி செய்ய முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்படி ஒவ்வொரு கடனையும் தள்ளுபடி செய்ய வேண்டும் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கேட்டால் பிறகு கடன் வழங்குவது நிறுத்தப் படக் கூடிய நிலைமை ஏற்படும்.

திரு. நா. வீராசாமி : நம்மைக் கேட்காமலே ஒரு சட்டத்தையும் போட்டுவிட்டு, அந்தச் சட்டமும் இப்பொழுது நடைமுறையில் இல்லாமல் இருக்கிறது. அந்தச் சட்டத்தை இப்பொழுது எடுத்துவிட்டார்கள். அந்தச் சட்டத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கொடுத்த தொகையை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று சொல்கிறார்கள். அதற்கு வட்டி வாங்குவது முறைதானா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கடன் என்று வந்தாலே வட்டியும் சேர்த்துத்தான் என்பது மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியும். அது பாதிக்கின்ற சட்டமா இல்லையா என்பது இந்தியாவெங்கிலும் அந்தச் சட்டம் வந்தபொழுதே விமர்சிக்கப் பட்டிருக்கிறது. இப்பொழுது ஏற்பட்டிருக்கிற சூழ்நிலை மத்திய அரசு, மாநில அரசு யார் யார் எப்படி பங்கை ஏற்றுக் கொள்வது என்பதல்ல. பொற்கொல்லர்களின் பிரச்னையை எப்படிப் பரிசீலிக்க வேண்டும், எப்படி அவர்களை இதிலிருந்து விடுபடச் செய்வது என்பதுதான். அந்த வகையிலேதான் நாம் அந்தத் தொகையிலே பாதியை ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.